அலுவல் சாரா பார்வையாளர் நியமன வழக்கு

# சிறை விதிகளில் திருத்தம் வேண்டும்

## பரிந்துரைகளை வெப்சைட்டில் வெளியிட உத்தரவு

**மதுரை, ஜன. 4:** அலுவல் சாரா பார்வையாளர்களாக பயிற்சி பெற்றவர்களை நியமிக்கக் கோரிய வழக்கில், தமிழக சிறை விதியில் திருத்தம் செய்யவும், பரிந்துரைகளை வெப்சைட்டில் வெளியிட வேண்டுமெனவும் ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

தமிழக சிறைகளில் அலுவல் சாரா பார்வையாளர்களாக உரிய பயிற்சி பெற்றவர்களை நியமிக்கக் கோரி, மக்கள் கண்காணிப்பக செயல் இயக்குநர் ஹென்றி டிபேன் ஐகோர்ட் மதுரை கிளையில் மனு செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர். மகாதேவன், ஜெ.சத்யநாராயண பிரசாத் ஆகியோர் பிறப்பித்த உத்தரவு:

கடந்த 2010 முதல் 2014 வரை பாளையங்கோட்டை மத்திய சிறையில் மட்டும் 33 பேர் இறந்துள்ளனர். எம்எல்ஏக்கள், சமூக ஆர்வலர்கள், மனோதத்துவ நிபுணர் உள்ளிட்டோர் அலுவல் சாரா பார்வையாளர்களாக இருக்க வேண்டும். இவர்களின் ஆய்வின்போது சிறைக்கைதிகளின் குறைகள் மற்றும் கருத்துக்களை அங்குள்ள பதிவேட்டில் குறிப்பிடுவர்.

சிறைகளில் சிசிடிவி கேமராக்கள் மூலம் முழுமையாக கண்காணிக்கப்படுவதாகவும், அனைத்து நடவடிக்கைகளும் பதிவு செய்யப்படுவதால் பின்னாளில் அவற்றை பரிசோதிக்கலாம் என சிறைத்துறை ஏடிஜிபி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும் சிறைக்கைதிகளின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களை சந்திக்க அனுமதிப்பதுடன், வாரத்திற்கு ஒரு முறையும், மாதத்திற்கு 45 நிமிடமும் தொலைபேசியில் பேச அனுமதிக்கப்படுகின்றனர். இதற்காக ரூ.2.01 கோடியில் 9 மத்திய சிறைகள், 3 சிறப்பு சிறைகளில் 54 தொலைபேசிகள் உள்ளன.

இது சிறைக்கைதிகளின் மன அழுத்தத்தை குறைக்கும். மேலும் நீதிபதி, கலெக்டர், டிஐஜி உள்ளிட்டோரின் குறைதீர் முகாமும் நடத்தப்படுகிறது. சிறை நல அலுவலர் மூலமும் போதுமான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சுகாதாரமான முறையில் உணவுகள் வழங்குவதாகவும், கல்வி போதிக்க போதுமான ஆசிரியர்கள் உள்ளதாகவும் சிறைத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அலுவல் சாரா பார்வையாளரின் பதவிக்காலம் முடியும் போது உரிய நேரத்தில் அந்த நியமனங்களை மேற்கொள்ளும் வகையில் அதற்கென குழுவை அமைக்க வேண்டும். அவ்வப்போது ஆய்வு செய்து, ஆலோசனை மற்றும் பயிற்சிகள் வழங்கிடும் வகையில் அனைத்து சிறைகளிலும் பார்வையாளர் குழுவை அமைக்க வேண்டும். அலுவல் சாரா பார்வையாளர் கூட்ட தீர்மானம், அரசுக்கான பரிந்துரைகளை மாவட்ட மற்றும் மாநில சிறை வெப்சைட்டில் வெளியிட வேண்டும்.

மாதிரி சிறை விதிகள் 2016 மற்றும் ஐநாவின் மண்டேலா விதிகளின்படி சிறை விதிகள் 1894 மற்றும் தமிழ்நாடு சிறை விதிகள் 1983ல் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அனைத்து சிறைகளிலும் இட நெருக்கடியை குறைக்க வேண்டும். சிறைக்கைதிகளின் உரிமை, புகார்கள், கோரிக்கைகள், ஒழுக்க நடவடிக்கை தொடர்பான சிறைக்கைதிகளின் உரிமை கையேட்டை அனைத்து சிறைக்கைதிகளுக்கும் வழங்குவதுடன், சிறைத்துறை வெப்சைட்டில் வெளியிட வேண்டும்.

குழுவின் பரிந்துரை மற்றும் அதன் மீதான நடவடிக்கை குறித்த ஆண்டறிக்கையை சிறைத்துறை ஐஜி தரப்பில் தயாரித்து வெப்சைட்டில் வெளியிட வேண்டும். மருத்துவ வசதி, குடிநீர், ஆரோக்கியமான உணவு எந்நேரமும் அனைவருக்கும் கிடைக்கும் வசதியை ஏற்படுத்த வேண்டும். சிறை நிர்வாகத்தை மேம்படுத்திடும் வகையில் சிறைக்கைதிகளோடு நேரடித் தொடர்பில் உள்ளவர்களுக்கு தேவையான புத்தாக்க பயிற்சி வகுப்புகளை தொடர்ச்சியாக வழங்க வேண்டும். பயனுள்ள வகையில் குறைதீர் பிரிவை செயல்படுத்திடும் வகையில் புகார்பெட்டிகள், சிசிடிவி கேமிரா உள்ளிட்ட வசதிகள் இருக்க வேண்டும். பார்வையாளர் முறை சிறப்பாக செயல்படும் வகையில் மனித உரிமை ஆணைய வழிகாட்டுதல்படி அனைத்து தரப்பினரையும் கொண்டு ஆண்டு மாநாட்டை அரசு தரப்பில் நடத்த வேண்டும்.

இவ்வாறு உத்தரவிட்டுள்ளனர்.